**அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 3/98**

எனது இல: ஆ/சீசீசட
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு
சுதந்திர சதுக்கம் .
கொழும்பு–07
1998 ஜனவரி மாதம் 30 ஆந் தேதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும்.

**ஆட்சேர்ப்புத் திட்டங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய வினைத்திறன்காண் தடைகள் பற்றிய ஏற்பாடுகள் தாபன விதிக் கோவையின் 11 ஆம் அத்தியாயத்தின் திருத்தம்.**

அரசாங்க சேவையின் எல்லாப் பதவிகளுக்குமான ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிப்படுத்துவது சம்பந்தமான ஏற்பாடுகள் உள்ளடங்கிய தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவுக்கும் அப்பதவிகளோடு தொடர்புடைய வினைத்திறன்காண் தடைகள் பற்றிய ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ள 15 ஆம் பிரிவுக்கும் உங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது. 15 ஆம் பிரிவானது பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது. இதன்படி தற்போதுள்ள 15:1 முதல் 15:7 வரையிலான உபபிரிவுகள் முறையே 15:2 முதல் 15:8 வரை என மீள இலக்கமிடப்படும்.

02. ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தயாரிப்படுத்தப்படும் போதும் திருத்தப்படும் போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வினைத்திறன்காண் தடைகள் பற்றிப் போதியளவு கவனம் செலுத்தாது விடுவதுபற்றித் தெரியவந்துள்ளது. பெரும்பாலும் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் வினைத்திறன்காண் தடையொன்று இருக்கிறது என்று மட்டுமே குறிப்பிடப்படுவதுடன் அந்தத் தடையோடு சம்பந்தப்பட்ட விபரங்கள் உள்ளடக்காமையால் பிற்காலத்தில் பலதரப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படுகின்றது. எனவே ஆட்சேர்ப்புத் திட்டங்களைத் தயாரிக்கும் போதும் திருத்தங்கள் செய்யும் போதும் வினைத்திறன்காண் தடைகள் பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை ஆட்சேர்ப்புத் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு திணைக்களத் தலைவர்களும் /அமைச்சுக்களின் செயலாளர்களும் பொறுப்பு ஏற்க வேண்டியதுடன் அவ்வாறு உள்ளடக்கப்பட்டிருப்பது பற்றிய உறுதிப்பாட்டுடன் அதை தாபனப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

15:1 (1) சம்பள அளவுத் திட்டம் ஒன்றுள்ள எல்லாப் பதவிகளுக்கும் வினைத்திறன்காண் தடை/தடைகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

(11) சம்பள அளவுத் திட்டத்தைக் குறிப்பிடும்போது அதன் 3 ஆம் சம்பளப் படி நிலையை அடையுமுன்னதாக முதலாம் வினைத்திறன்காண் தடை உள்ளடக்கப்பட வேண்டும். 2ஆம் வினைத்திறன் காண் தடையைக் குறிப்பிடுவதாயின் அது 7 ஆம் சம்பளப் படிநிலையை அடையுமுன்னதாக உள்ளடக்கப்பட வேண்டும்.

(iii) (அ) வினைத்திறன்காண் தடைப்பரீட்சையானது எழுத்துப் பரீட்சையா அல்லது தொழில்சார் பரீட்சையா அல்லது வாய்மொழிமூலப் பரீட்சையா அல்லது இவை எல்லாம் உள்ளடக்கப்பட்ட ஒரு பரீட்சையா என்பது பற்றிய விபரங்கள் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) வினைத் திறன் காண் தடைப் பரீட்சையானது எழுத்துப் பரீட்சையாயின் அதன் பாடங்களையும் அப்பாடங்களுக்கான பாடத்திட்டங்களையும், விளக்கமாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) அவ்வாறே அப்பரீட்சை தொழில்சார் பரீட்சையாயின் அல்லது மேலே குறிப்பிடப்பட்ட (அ) வில் உள்ளதுபோன்று எல்லாம் உள்ளடக்கப்பட்ட பரீட்சையாயின் அப்பரீட்சைக்கான பாட எல்லைகளையும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) வினைத்திறன்காண் தடைப் பரீட்சையானது வாய்மொழிமூலப் பரீட்சையாயின் எந்தத்துறை பற்றிய வாய்மூல அறிவு தேவைப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டும்.

(உ) அனைத்து வினைத்திறன்காண் தடைகளும் ஒரு வருடத்தில் எத்தனை முறைகள் நடத்தப்படுகிறன என்றும், யாரால் அவை நடத்தப்படுகின்றனவென்றும் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஊ) எழுத்துப் பரீட்சையாயின் அதற்கான ஒவ்வொரு பாடமும் சித்தியடைவதற்குப் பெறவேண்டிய ஆகக்குறைந்த புள்ளிகள் எவ்வளவு என்பதையும் தொழில்சார் பரீட்சையாயின் /வாய் மொழிமூலப் பரீட்சையாயின் அல்லது மேலே (iii) (அ) வில் குறிப்பிடப்பட்டது போன்று அனைத்தையும் உள்ளடக்கிய பரீட்சையாயின் சித்தியடைவதற்குப் பெற்றுக் கொள்ள வேண்டிய ஆகக் குறைந்த மொத்தப் புள்ளிகள் எவ்வளவு என்பதையும் அளவுகளையும் வெவ்வேறாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

(எ) வினைத்திறன்காண்பரீட்சையில் பல பாடங்கள் உள்ள சந்தர்ப்பத்தில் அப்பாடங்கள் அனைத்தையும் ஒரே முறையில் சித்தியடைய வேண்டுமா அல்லது வேறு வேறு சந்தர்ப்பங்களில் சித்தியடைதல் போதுமா என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) ஏதாவது ஒரு பதவியின் உத்தியோகத்தர் ஒருவர் இலங்கை நிருவாக சேவையின் உத்தியோகத்தர்களுக்காக நடைபெறுகின்ற வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கு தோன்றி அதில் சித்தியடைதல் போதுமென்று

சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பாராயின் அதுபற்றி ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டியதுடன் அதற்கு முன்னர்,

(அ) அதற்காக ஒன்றிணைந்த சேவைகளின் பணிப்பாளர் அதிபதியின் அனுமதியையும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் இணக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ஆ) அந்தப் பரீட்சை பற்றி வர்த்தமானியில் அறிவித்தல் கொடுக்கும் போது சம்பந்தப்பட்ட உத்தியோயத்தர்களுக்கு அப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு இயலும் வண்ணம் தேவையான தகவல்களை வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்குவதற்கு ஒன்றிணைந்த சேவைகளின் பணிப்பாளர் நாயகத்துடன் தொடர்பொன்றை ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

(இ) அவ்வாறான ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அனுமதிக்காகத் தாபனப் பணிப்பாளரிடம் அனுப்பும் போது மேலே (iv)(அ)வில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியையும் இணக்கத்தையும் பெற்றுக் கொண்ட கடிதங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(v) அவ்வாறே வேறொரு பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் இன்னுமோர் பதவியொன்றின் உத்தியோகத்தர்களுக்காக நடைபெறுகின்ற வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோன்றிச் சித்தியடைதல் பொருத்தம் என அமைச்சரவையின் செயலாளர் தீர்மானிப்பாராயின், அதுபற்றி ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட வேண்டும். அத்துடன் அதற்கு முன்னர் மேலே (iv)ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று குறிப்பிட்ட அதிகாரிகளின் அனுமதியையும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் இணக்கத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன் ஆட்சேர்ப்புத் திட்டங்கள் தாபனப் பணிப்பாளரிடம் அனுமதிக்காக அனுப்பப்படும் போது மேலே (iv)(அ) வில் குறிப்பிடப்பட்டுள்ள அனுமதியையும் இணக்கத்தையும் பெற்றுக் கொண்ட கடிதங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(vi) மேலே iv,v ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று வேறு சேவைகளின் உத்தியோகத்தர்கள் வேறு சேவைகளுக்குரித்தான சேவைநடைமுறையொன்று அல்லது ஆட்சேர்ப்புத் திட்டமொன்றின் கீழ் நடைபெறுகின்ற வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றுகின்ற சந்தர்ப்பத்தில், அந்த நிருவாக சேவை நடைமுறையின் கீழ் அந்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்காகக் கிடைக்கின்ற ஏதேனும் விதிவிலக்குகள் இருப்பின் அந்த விதிவிலக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களுக்கு இடமளிக்கப்படமாட்டாது. அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் அந்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கான அனுமதி மாத்திரமே.

(vii) ஏதேனும் ஒரு பதவியின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையானது டிப்புளோமா சான்றிதழ் /பட்டப்பின் படிப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் அல்லது வேறேதும் கல்விச் சான்றிதழ் ஒன்றை/தொழில் சார் சான்றிதழ் ஒன்றைப் பெற்றுக் கொள்வதாக அமையுமாயின்.

(அ) அந்த பட்டப் பின் படிப்புச் சான்றிதழ்/டிப்புளோமாச் சான்றிதழ் / வேறேதும் கல்விச் சான்றிதழ் அல்லது தொழில் சார் சான்றிதழானது அரச அங்கீகாரம் பெற்ற நிறுவகம் ஒன்றிலிருந்து பெறப்பட்டதாக இருக்கவேண்டும். அத்துடன் அந்தச் சான்றிதழை வழங்கிய நிறுவத்தின் பெயரும் டிப்புளோமா சான்றிதழாயின் அதற்கான கால எல்லையையும் குறிப்பிடல் வேண்டும்.

(viii) அரசாங்க நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையாயின் அப்பரீட்சை நடாத்தப்படுகின்ற நிறுவகம் அடங்கலாக அப்பரீட்சை பற்றிய விபரங்கள் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ix) ஆசிரிய சேவையின் உத்தியோகத்தர்கள் தொடர்பானவிடத்து அவர்களது வினைத்திறன்காண் தடையானது கருத்தரங்குகள்,மாநாடுகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதாக அமையும்போது, அது எந்தக் கருத்தரங்கு, மாநாடு என்பது பற்றியும் எவ்வளவு மாநாடுகள் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டும் என்பது பற்றியும் குறிப்பிடுதல் வேண்டும்.

(x) குறிப்பிட்ட தினத்துக்கு வினைத்திறன்காண் தடைப்பரீட்சை நடாத்துவதற்காக நியமன அதிகாரியும்/நிருவாக அதிகாரியும் /திணைக்களத் தலைவரும் கூட்டுப்பொறுப்பு உடையவர்களாக இருப்பர்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு